# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,923/3 — 1970 සැප්තැම්බර් 16 වැනි බදාදා — 1970.9.16

14,923/3 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## மகாதேசாதிபதியின் பிரகடனம்

1970 இன் இல. 296/4

ம. தே. அ. எண் : சீ. 146/48

பிரதிநிதிகள் சபை உதவிச் செயலதிகாரி, திருவாளர் எஸ். என். செனெவிரத்ன அவர்களை, 1970 செத்தெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து பிரதிநிதிகள் சபைச் செயலதிகாரி, திருவாளர் எஸ். எஸ். விஜேசிங்க அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை அல்லது மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை, பிரதிநிதிகள் சபைச் செயலதிகாரியாக கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதி உத்தமரின் கட்டளைப்படி,
டி. ஸ்ரீ. சயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 16.

9–914

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி 495

உப உணவுப்பொருட்கள்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி சார்லஸ் இமானுவல் கென்றி அமரசேகெரு ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) 1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ந் தேதி வெளியான 14, 920/7 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ந் தேதியைக் கொண்ட சி 494 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையின் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆக்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆக்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும், ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்குகப் பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல்வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோல் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆக்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால், ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 16 ந் திகதியன்று பிற்பகல் 3.45 மணிக்குக் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

சா. இ. கெ. அமரசேகெரு,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | | பத்தி 2<br>இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய இறக்குமதி விலை<br>ரூ. ச. | | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இறாத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| கொத்தமல்லி | .. | — | .. | 82 00 | .. | 0 84 |
| சிறு வெங்காயம் | .. | — | .. | 24 00 | .. | 0 28 |
| வெங்காயம் (சிறுவெங்காயம் தவிர்ந்த எல்லா ரகமும்) | .. | 32 50 | .. | 34 00 | .. | 0 38 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும் இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையுடைய விற்பனையைக் குறிப்பதாகும்.

9–915

---

உணவு விலைக்கட்டளை இல. சி. 496 — பால் உணவு

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி சாள்ஸ் இமானுவல் கென்றி அமரசேகரா ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1970 ம் ஆண்டு யூலை மாதம் 2 ந் திகதி வெளியான 14,912/7ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1970 ம் ஆண்டு யூலை மாதம் 1 ந் திகதியைக் கொண்ட சி 492 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(2) இதனுடனிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த டசின் தகரப் புட்டிகளை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர தகரப் புட்டி ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக இலங்கைத் தீவகத்துள் விற்கலாகாதெனவும் இதை உடனடியாக நடைமுறையில் கொண்டுவருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த டசினைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த டசினுக்குக் குறைந்த எத்தொகையை யாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறெரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும் இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும், ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்குகப் பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின் வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (தகரப் புட்டிகளும் அதன் நிறைகளும்) ;
(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?.

(7) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென கருதப்படுதல் வேண்டும்.

1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ந் திகதியன்று பிற்பகல் 3.45 மணிக்குக் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

சா. ஆ. டெ. அமரசேகர,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (பதில்).

அட்டவணை

| பத்தி 1<br>பால் உணவு ரகம் | பத்தி 2<br>ஒரு டசின் தகரப் புட்டி களின் ஆகக்கூடிய மொத்த விலை | பத்தி 3<br>ஒரு தகரப் புட்டியின் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| லக்றோஜின் திருத்தியமைத்தும் செமிப்பாக்கிய பால் மா (கழிநிலையாக 1 இரு./454 கிறும்ஸ்) .. | 47 75 | 4 20 |
| லக்றோஜின் திருத்தியமைத்தும் செமிப்பாக்கிய பால்மா (கழிநிலையாக 2½இரு./11.34 கிலோகிறும்ஸ்) | 110 50 | 9 75 |
| லக்றோஜின் திருத்தியமைத்தும் செமிப்பாக்கிய பால்மா (கழிநிலையாக 5 இரு./2.268 கிலோ கிறும்ஸ்) | 192 00 | 16 80 |
| லக்றோஜின் குழந்தைகளுக்கு ஊட்டுவதற்கு முழுப் புரதச்சத்து விற்றமின் என முறையே சேர்க்கப்பட்டு செமிப்பாக்கிய பால் (கழிநிலையாக 1 இரு./454 கிறும்ஸ்) .. .. .. | 47 75 | 4 20 |
| லக்றோஜின் குழந்தைகளுக்கு ஊட்டுவதற்கு முழுப்புரதச்சத்து விற்றமின என முறையே சேர்க்கப்பட்டு செமிப்பாக்கிய பால் (கழி நிலையாக 2½ இரு./1135 கிறும்ஸ்) .. .. .. | 110 50 | 9 75 |
| பெலார்கொன் குழந்தைகளுக்கு ஊட்டுவதற்கு முறையே சேர்க்கப்பட்ட பால் (கழிநிலையாக 1 இரு./454 கிறும்ஸ்) .. .. .. .. .. | 51 25 | 4 50 |
| பெலார்கொன் குழந்தைகளுக்கு ஊட்டுவதற்கு முறையே சேர்க்கப்பட்ட பால் (கழிநிலையாக 2½ இரு./1.134 கிலோ கிறும்ஸ்) .. .. .. . | 117 50 | 10 40 |
| நெஸ்ரோஜின் குழந்தை உணவு (கழிநிலையாக 1 இரு./454 கிறும்ஸ்) .. . | 50 10 | 4 45 |
| எவிடொன் அமில வெண்ணெய் பால் (கழிநிலையாக ½ இரு./227 கிறும்ஸ்) .. . | 29 13 | 2 60 |
| கௌ அன்ட் கேட் பால் உணவு (கழிநிலையாக நிறை 30 அவு./850 கிறும்ஸ்) .. | 90 00 | 8 00 |
| கௌ அன்ட் கேட் பால் உணவு (கழிநிலையாக நிறை 14 அவு./396 கிறும்ஸ்) .. .. | 45 00 | 4 00 |
| கௌ அன்ட் கேட் பால் உணவு அரைப்பாலாடை (கழிநிலையாக நிறை 12 அவு./340 கிறும்ஸ்) .. | 45 00 | 4 00 |
| ஒஸ்ரமில்க் சேர்க்கப்பட்ட குழந்தை பால் உணவு (கழிநிலையாக 32 அவு./908 கிறும்ஸ் கழிநிலையாக) .. | 84 00 | 7 65 |
| ஒஸ்ரமில்க் சேர்க்கப்பட்ட குழந்தை பால் உணவு (16 அவு. கழிநிலையாக/454 கிறும்ஸ் கழிநிலையாக) .. | 46 80 | 4 35 |
| எஸ் எம் எ உணவு முறையே சேர்க்கப்பட்டது குழந்தைகளுக்காக (ஒரு இருத்தல் கழிநிலையான நிறை) | 55 20 | 4 95 |
| என்பாமில் குழந்தை முறையே சேர்க்கப்பட்ட இரும்புடன் (1 இரு. கழிநிலையாக/454 கிறும்ஸ்) .. | 61 44 | 5 50 |
| என்பாமில் குழந்தை முறையே சேர்க்கப்பட்ட (ஒரு இருத்தல் கழிநிலையாக/454 கிறும்ஸ்) .. | 61 41 | 5 50 |
| என்பாமில் மா குழந்தை முறையே சேர்க்கப்பட்ட (1 இரு. கழிநிலையாக/454 கிறும்ஸ்) .. | 61 44 | 5 50 |
| என்பாமில் (இரும்புடன்) மா குழந்தை முறையே சேர்க்கப்பட்ட (1 இரு. கழிநிலையாக/454 கிறும்ஸ்) | 61 44 | 5 50 |
| விற்ராமில்க் சேர்க்கப்பட்ட குழந்தை பால் உணவு (1 இரு. கழிநிலையாக) .. .. | 37 56 | 3 20 |
| விற்ராமில்க் சேர்க்கப்பட்ட குழந்தை பால் உணவு (2½ இரு. கழிநிலையாக) .. .. | 84 12 | 7 20 |
| விற்ராமில்க் சேர்க்கப்பட்ட குழந்தை பால் உணவு (5 இரு. கழிநிலையாக) .. .. | 150 00 | 13 10 |
| மில்கோஸ் குழந்தை பால் உணவு (கழிநிலையான நிறை 1 இரு./16 அவு. அல்லது 454 கிறும்ஸ்) .. | 48 50 | 4 20 |
| லீற்ரா குழந்தை பால் உணவு (கழிநிலையான நிறை 1 இரு./454 கிறும்ஸ்) .. .. | 44 50 | 4 00 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்கலாகாது.

9–916

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.